DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO.56/2025**

Deposition of LW1 examined as PW1 Date: 10.10.2025

| | |
|---|---|
| Name | அனிதா |
| Father's/Husband's Name | கோபி |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 39/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.10.2025**

**(A1, A2 Present)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்துவீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கும் எனது கணவர் 1ம் எதிரி கோபிக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு 14.03.2010 ம் ஆண்டு மயிலாடுதுறையில் திருமணம் நடைபெற்றது. எனக்கு திருமணத்தின் விளைவாக 2 பெண் பிள்ளைகள் உள்ளனர். எனது மூத்த மகள் காயத்ரி தற்பொழுது 10 ம் வகுப்பு படித்து வருகிறார். எனது 2 வது மகள் ஆரதி ஸ்ரீ 6ம் வகுப்பு படித்து வருகிறார். எனது கணவர் 2ம் எதிரியான கார்த்திகேயன் மனைவி ரூபலோசனியுடன் கள்ளத்தொடர்பில் இருந்தார். கடந்த 03.11.2022 ம் தேதி அன்று காலை 11.00 மணி அளவில் எனது கணவரிடம் மேற்படி கள்ளத்தொடர்பில் இருந்தது சம்பந்தமாக கேட்டபோது என்னை குச்சிக்காரி தேவுடியா மகளே என்று திட்டினார். மேலும் அங்கிருந்த கட்டையால் என்னை முதுகில் அடித்து என்னை வீட்டை விட்டு வெளியே போ என்று கூறினார். அப்பொழுது எனது கணவருடன் 2ம் எதிரியும் இருந்தார். 2ம் எதிரியும் என்னை கையால் அடித்து வீட்டை விட்டு போடி என்று சொன்னார். எனது கணவர் வீட்டில் உள்ள உனது சாமான்களை எடுத்துக்கொண்டு சென்று விடு இல்லை என்றால் உன்னையும் உனது பிள்ளைகளையும் கொன்று விடுவேன் என்று மிரட்டினார். எனக்கு வலி தாங்கமுடியாமல் இருந்ததாலும் என்ன செய்வதென்று அறியாமலும் நான் வீட்டில் இருந்து விட்டேன். அதன் பிறகு 05.11.2022 ம் தேதி அன்று காவல் நிலையம் சென்று புகார் மனுவினை கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையத்தில் விசாரித்து விட்டு பின்பு வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் காலை 06.00 மணிக்கும் வீட்டிற்கு வந்து மாலை 04.00 மணிக்கும் விசாரித்தார்கள் அதன்பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. புகாரிலும், போலிசார் விசாரணையில் 1வது எதிரி என்னைமுதுகில் அடித்தாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1 வது எதிரி என்னை முதுகில் அடித்தற்கு மருத்துவமனயில் சிகிச்சை எடுத்துக் கொண்டேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்திற்கு

ஒ. அனிதா

சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு துரம் என்றால் சுமார் 1.5 கி.மீ தூரம் இருக்கும். பேருந்தில் பயணம் செய்தால் சுமார் 15 நிமிடங்கள் ஆகும். புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து 3ம் நபரை வைத்து எழுதினேன். 3ம் நபரின் பெயர் என்ன என்று எனக்கு தெரியவில்லை. நான் கொடுத்த புகாரில் கையெழுத்து போட்டுள்ளதற்கு மேல் 04.11.2022 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 2 நாட்கள் காலதாமதாக புகார் கொடுத்ததற்கு என்ன காரணம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வெளிக்காயங்கள் இல்லை என்பதால் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நடந்ததாக சொல்லப்பட்டுள்ள சம்பவம் எங்கு நடந்தது என்றால் வீட்டிற்குள் நடந்தது. ப.சா.2 மற்றும் 3 எனது தாய் தந்தையர் என்றால் சரிதான். ப.சா.2 மற்றும் 3 என்னுடன் இருந்தார்களா என்றால் எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள். ப.சா.2 மற்றும் 3 சண்டை நடந்த போது தடுத்தார்களா என்றால் தடுத்தார்கள் அவர்களையும் 1ம் எதிரி திட்டினார். எனது அப்பாவையும் அம்மாவையும் 1வது எதிரி திட்டினார் என்பதை போலிசாரிடம் சொன்னனா என்றால் சொன்னேன். 1வது எதிரிக்கும் எனக்கும் நடந்த திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கபட்டு நடந்துது என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் 1வது எதிரியின் குடும்பத்தை பற்றி விசாரித்து தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி வெளி நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். வெளி நாட்டில் வேலை செய்ததால் அவர் நல்ல பையன் என்று தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். 2வது எ திரிக்கு கணவர், குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி திருமணத்திற்கு பின்பு எவ்வளவு நாட்கள் கழித்து வெளி நாட்டிற்கு சென்றால் என்றால் 2 மாதம் கழித்து சென்றார். வருடத்திற்கு எத்தனை முறை ஊருக்கு வருவார் என்றால் ஞாபகம் இல்லை. கடைசியாக எப்போது வெளி நாட்டில் இருந்து ஊருக்கு வந்தார் என்றால் ஞாபகம் இல்லை. தற்போது நான் தங்கி உள்ள வீடு 1வது எதிரியின் வீடு என்றால் சரிதான். எதிரிகளின் மீது காவல் நிலையத்தில் எத்தனை புகார்கள் கொடுத்துள்ளேன் என்றால் இந்த வழக்கினை தவிர மேலும் 2 புகார்கள் கொடுத்துள்ளேன். திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து 1வது எதிரி, 2வது எதிரியுடன் தொடர்பில் இருந்தது தெரியவந்தது என்றால் 4 வருடங்கள் கழித்து தெரியவந்தது. 2014 ம் ஆண்டு முதல் 2020 வரை 1வது எதிரியின் மீது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் 2வது எதிரியின் வீட்டில் இருந்து வருகிறார். நானும் 1வது எதிரியும் எவ்வளவு நாட்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 4 வருடங்கள். 1வது எதிரியுடன் சேர்ந்து வாழ்வதற்கு காவல்நிலையத்தின் மூலமாகவோ நீதிமன்றத்தின மூலமாகவோ ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் 1வது எதிரி எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ள விவாகரத்து வழக்கில் நான் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளதாக தெரிவித்துள்ளேன். 2வது எதிரியை நானும் குமரன், ஸ்ரீதேவி, கிஷோர் ஆகியோர் சேர்ந்து கொண்டு 2வது எதிரியின் வீட்டிற்கு சென்று தாக்கியது சம்பந்தாக குத்தாலம் காவல்நிலையத்தில் குற்ற எண் 448/2022ன் கீழ் ச/பி. 294(b), 323, 506(i) என்று வழக்கு பதிவு செய்து STC.NO.534/2023 என்று இந்த நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு நடந்துள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் 05.09.2023 ம் தேதி என்னையும், குமரன், ஸ்ரீதேவி, கிஷோர் ஆகியோரையும் குற்றவாளி என்று முடிவு செய்து தண்டத்தொகை விதிக்கபட்டு நாங்கள் தண்டத்தொகை செலுத்தியுள்ளோம் என்றால் சரிதான்.

ப. அனிதா.

1வது எதிரியின் வீட்டிற்குள் பூட்டை உடைத்து உள்ளே சென்றதற்காக இந்நீதிமன்றத்தில் சிசி 29/2025 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கானது 2வது எதிரியால் அதிகாரம் பெற்று நீதிமன்றத்தில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 1வது எதிரி என்மீது விவாகரத்து வழக்கு மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் HMOP 37/2022என்று தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். 1வது எதிரி மேற்படி வழக்கினை தாக்கல் செய்த போது நான் எனது தந்தைவீட்டில் தான் இருந்து வந்தேன் என்றால் சரிதான். விவாகரத்து வழக்கு சம்பந்தமாக என்னால் அலைய முடியவில்லை என்பதால் நான் தான் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நாகப்பட்டினம் குடும்ப நல நீதிமன்றத்திற்கு மாற்றி உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது எதிரியின் மீது DVC.No.21/2025 என்ற வழக்கு இந்ந நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுலையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் எதிரி என்னை கொடுமைப்படுத்தியது சம்பந்தமான நிவாரணம் ஏதேனும் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. 1வது எதிரி வெளி நாட்டில் வேலை செய்து நன்றாக சம்பாதித்து வந்தார் என்றால் சரிதான். 1வது எதிரி வெளி நாட்டில் வேலை செய்து எனக்கு அனுப்பிய பணத்தினை நான் வீண் விரயமாக செலவு செய்ததால் அதை பற்றி 1வது எதிரி என்னிடம் கேட்டதற்கு நான் 1வது எதிரியின் மீது பொய்யான குற்றச்சாட்டினை கூறினேன் என்றாலும் அந்த சமயத்தில் 2வது எதிரி, 1வது எதிரிக்கு ஆதரவாக இருந்ததால் அவர் மீதும் பொய்யான குற்றச்சாட்டினை கூறி குத்தாலம் காவல் நிலையத்தில் பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் "15 பவுன் நகை , சீர்வரிசை பொருட்களை எடுத்துக்கொண்டு நீ இங்கு வரக்கூடாது" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிரி என் மீது தாக்கல் செய்த விவாகரத்து வழக்கிற்கு நான் எங்கிருந்து விசாரணைக்கு செல்கிறேன் என்றால் மயிலாடுதுறை யில்இருந்து தான் சென்று வருகிறேன். என்ன காரணத்திற்காக மயிலாடுதுறையில் இருந்து நாகப்பட்டினம் நீதிமன்றத்திற்கு விவாகரத்து வழக்கினை மாற்ற கோரினேன் என்றால் அலைய முடியவில்லை என்பதால் கேட்டேன். 1, 2 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் அவர்களுக்கு எதிராக நான் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, நேரம் மற்றும் இடத்தில் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் கற்பனையாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பேன் என்றாலும் நான் காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி தற்போது வரை எனக்கும் எனது குழந்தைகளுக்கும் இடைக்கால ஜீவனாம்சமாக செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். 1வது எதிரி ஒரு நல்ல கணவனாக தற்போது வரை இருந்து வருகிறார் என்று சொன்னால் இல்லை.

ப. அனிதா

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எது பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

10/10/25

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.